[2010 ஏப்ரல் 19

முற்பகல் 10-25

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை மண்ணிலிருந்து 80 வயதைத் தாண்டிய மூதாட்டி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வேல்முருகன், அதைத்தான் எடுக்கப் போகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் எடுக்கப்போகிறேன். கூப்பிடும்போது அதில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? திரு. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் சோதனைச் சாவடி இடம் ஏற்கெனவே காவல் துறை 9 முறை சுட்ட . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது குறித்து முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்; ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.*

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள், மலேசியாவிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்ததும், மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டதும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களின் தாயார் திருமதி பார்வதியம்மாள் அவர்கள் மலேசியாவிலிருந்து சென்னைக்கு சிகிச்சைக்காக வந்தபோது, விமான நிலையத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்டது குறித்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. ஞா. ஜாண் ஜோசப், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன்,*